# NEWCASTLE TAMIL SANGAM (NTS)

# NEWSLETTER Q3, Q4/2024-2025

# January—June 2025 Highlights

# தைப்பொங்கல்

2-2-2025 அன்று எங்கள் தமிழ்ப் பாடசாலையில் தைப்பொங்கலைக் கொண்டாடினோம்.

இதன் போது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், தமிழ்சங்க அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

பெற்றோர்களில் ஒருவரான ரத்தீஸ் அவர்கள் தைப்பொங்கலைப் பற்றி மாணவர்களுடன் உரையாடினார்.

பொங்கலையும் ஏனைய உணவு வகைகளையும் அனைவரும் பகிர்ந்து உண்டார்கள்

மகிழினி















# விடுகதைகள்

1 இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது அது என்ன?
பட்டாசு

2 நான் வெட்டுப்பட்டால், வெட்டியவனை அழ வைப்பேன்.அவன் யார்?
வெங்காயம்

3 அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான்.அவன் யார்?
பந்து

4 பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்த வாய். அவள் யார்?
பச்சைக் கிளி

5 தேடிக் கிடைத்த இரையை, கூடி கூடி உண்பான். அவன் யார்?
காகம்


6 தொடாமல் கத்துவான் தொட்டால் பேசுவான். அவன் யார்?
தொலைபேசி

7 பேச்சுக் கேட்குது பேசுபவரை தெரியவில்லை. அது என்ன?
வானொலிப் பெட்டி

8 காற்றைக் குடித்து காற்றில் பறப்பான் . அவன் யார்?
பலூன்

9 பற்கள் இருக்கும் கடிக்க மாட்டான். அவன் யார்?
சீப்பு

10 விளக்கை சுமந்தபடி விடிய விடிய பறக்கும். அது என்ன?
மின்மினிப் பூச்சி



| நூல் | | நூலாசிரியர் |
|---|---|---|
| திருக்குறள் | — | திருவள்ளுவர் |
| தொல்காப்பியம் | — | தொல்காப்பியர் |
| கம்பராமாயணம் | — | கம்பர் |
| சிலப்பதிகாரம் | — | இளங்கோ அடிகள் |
| சீவகசிந்தாமணி | — | திருத்தக்கதேவர் |
| மணிமேகலை | — | சீத்தலைச்சாத்தனார் |
| குண்டலகேசி | — | நாதகுத்தனார் |
| பாஞ்சாலி சபதம் | — | பாரதியார் |
| பாப்பாப் பாட்டு | — | பாரதியார் |
| ஆத்திசூடி | — | ஔவையார் |
| கொன்றை வேந்தன் | — | ஔவையார் |
| நல்வழி | — | ஔவையார் |
| மூதுரை | — | ஔவையார் |

மகிழினி கோபன்
வயது எட்டு

## Up coming Event

**Newcastle Tamil Sangam AGM 2025**

**Members Only Event**

Date: Saturday, 5th July 2025
Time: 5:00 pm
Venue: Pasterfield CC Main Hall,
18C Horizon Ave,
Cameron Park, NSW 2285.

# NTS Annual Cultural Night 2025

The annual cultural night organized by the Newcastle Tamil Sangam was successfully held this year on 5th April 2025 at St Phillips Hall, Waratah.

This year saw a large number of participants eager to showcase their talents on stage, highlighting the high regard and popularity the event has earned among the community. More than twenty diverse performances were featured in the event. It included captivating dances, comedy skits, drama, melodious songs and traditional villupattu (musical storytelling), making it a vibrant and colourful celebration.

The event concluded delightfully with a delicious traditional dinner, offering a variety of dishes.

நியூக்காசில் தமிழ் சங்கம் ஆண்டு தோறும் நடத்தும் கலை விழா இம்முறையும் மிக சிறப்பாக 05/04/2025 அன்று St Philips Hall , Waratah வில் நடைபெற்றது.

தங்கள் ஆக்கங்களை மேடை ஏற்ற, இம்முறை பலர் விண்ணப்பித்திருந்தமை, கலை விழா மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றுள்ளதை காட்டி நிற்கிறது.

இருபதுக்கும் மேற்பட்ட நிகழ்சிகள் இடம்பெற்றன. கண்கவர் நடனங்கள், நாடகம், இனிய பாடல்கள், வில்லுப்பாட்டு என பல வகையான அம்சங்களும் நிறைந்த நிகழ்வாக அமைந்தது. அறுசுவையும் கூடிய இராப்போசனத்துடன் கலை விழா இனிதே நிறைவடைந்தது.






79 Million Speaks Tamil
தமிழ்

















NEWCASTLE TAMIL SANGAM
Presents
Annual Cultural Night
கலை விழா




NEWCASTLE
TAMIL SANTHAI
BANANAS
SAREES








தமிழ் இசை அரங்கம்
Tamil Isai Arangam
பாடல்: வள்ளிக்கணவன் பேரை
பாடியவர்: அம்பசமுத்திரம் சுப்பாராயஸ்வாமிகள்
ராகம்: செஞ்சுருட்டி
தாளம்: சதுஸ்ர ஏகம்
Song: Valli Kanavan Perai
Composer: Ambaasamuthiram Subarayaswamigal
Raga: Senchurutti
Tala:
























DIARY
of a
Wimpy Kid
THE MUSICAL

**"அன்னையர் தினம்"**

அன்னையர் தினம் உலகம் முழுவதும் வாழும் தாய்மார்களைக் கொண்டாடும் நாள். இது ஆயிரத்து தொளாயிரத்து எழாம் ஆண்டு, வைகாசி மாதம் பன்னிரண்டாம் திகதியில் இருந்து கொண்டாடப்படுகிறது. இது அன்னா ஜார்விஸால் தொடங்கப்பட்டது. இந்நாளில் எல்லோரும் தனது தாய்மார் அவர்களுக்குச் செய்த அனைத்துக் காரியங்களுக்கும் மற்றும் உதவிகளுக்கும், அவர்கள் தனது தாய்மார்களுக்கு நன்றி சொல்லும் நாள் இது.

இந்தத் தினத்தை மக்கள் பல வழிகளில் கொண்டாடுவார்கள். பலர் அவர்கள் அம்மாவிற்கு அன்னையர் தின வாழ்த்து அட்டைகளைக் கொடுப்பார்கள். சிலர் பரிசுகளைக் கொடுப்பார்கள் மற்றும் அவர்கள் அம்மாவிற்கு உணவைச் சமைத்துக் கொடுப்பார்கள். இது கொண்டாடுவதற்கான சில வழிகள் மட்டுமே.

அன்னையர் தினம் மிக முக்கியமானது என்று நான் நம்புகிறேன். தமது தாய்மார்கள் போன்ற ஒரு முக்கியமான நபரைப் பாராட்டுவது மிக முக்கியம். அம்மாக்கள் செய்யும் அனைத்தையும் உணர உதவி செய்யும் நாள் இது.

- அஷ்வின் . பி

# அன்னையர் தினம்

நியூகாசில் தமிழ்ப் பள்ளியில் அன்னையர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

